**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**
**O.S.No. 299 of 2020**

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | **PW1** |
| **Name of the Witness** | : | சுப்ரமணியன் |
| **Father's Name** | : | பரமானந்தம் |
| **Age** | : | 66 |
| **Occupation** | : | |
| **Address** | : | வெள்ளாளர் தெரு, குறிஞ்சிப்பாடி தாலுக்கா |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 15th day of February, 2024.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :-

1. நான் எட்டாம்வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்எல்சி நிறுவனத்தில் சீனியர் டெக்னிஷியனாக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றேன். என் மகனுக்கு வேலை வாங்கி தருவதாக, என்னை பல மாதங்களாக பிரதிவாதிகள் சந்தித்து பேசி வந்தார்கள். மூர்த்தி மற்றும் முருகன் ( பிரதிவாதிகள் ) ஆகிய இருவரும் எனக்கு உறவினர்களா என்றால், என் மகன் ராஜ்குமாருக்கு அவரது மனைவி வழியில் உறவினர்கள். எவ்வளவு தொகை அவர்களிடம் கொடுத்தேன் என்றால், 21 லட்ச ரூபாய் கொடுத்தேன். 18.12.2014 முதல் தொகை கொடுக்க ஆரம்பித்தேன். அன்றைய தினம் எவ்வளவு தொகை கொடுத்தேன் என எனக்கு சரியாக தற்போது நினைவில்லை. 18.12.2014 அன்று யார் பணம் கொடுத்தார் என்றால், என் மகன் ராஜேந்திரபிரசாத் கொடுத்தார். நாங்கள் எல்லோரும் வீட்டில் இருக்கையில், எங்கள் வீட்டில் வைத்து, 18.12.2014 அன்று முதல் முறையாக பணம் கொடுக்கப்பட்டது. 18.12.2014 முதல் 11.02.2015 வரை ஐந்து தவணைகளாக நான் பணம் கொடுத்ததாக சொல்லும் நிகழ்வுகளில், எல்லா முறையும் என் மகன் தான் தொகைகளை வழங்கினாரா என்றால், எங்கள் வீட்டில் வைத்து, பிரதிவாதிகளிடம் எங்கள் மகன் பணம் கொடுத்தார். எந்தெந்த தேதிகளில் எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது என்றால், வீட்டில்

கணக்கு எழுதி வைத்துள்ளேன், அந்த கணக்கினை தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்யவில்லை, ஏனெனில் அது வீட்டின் மொத்த வரவு செலவு கணக்கு ஆகும். எவ்வாறு பிரதிவாதிகளுக்கு நான் பணம் கொடுத்தேன் என்றால், நகைகளை அடகு வைத்தும், பி எஃப் - ல் லோன் போட்டும், நிலத்தை கிரயம் பேசியும், வந்த தொகைகளை அவை வரவர பிரதிவாதிகளிடம் கொடுத்தேன்.

2. எந்த வருடம் முதன்முறையாக புகார் கொடுத்தேன் என்றால், வருடம் ஞாபகமில்லை, ஆனால் குறிஞ்சிப்பாடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். எந்த அடிப்படையில் வழக்கு போட்டுள்ளேன் என்றால் பிரதிவாதிகள் எங்களிடம் பணம் பெற்றுக்கொண்டதால் அதனை பெற வழக்கு போட்டுள்ளேன். வாதசாஆ 9 புரோநோட் அடிப்படையில் இவ்வழக்கினை தொடர்ந்துள்ளேனா என்றால் ஆமாம். வாதசாஆ 9 புரோநோட் காவல்நிலையத்தில் வைத்து எழுதி வாங்கப்பட்டதா என்றால் இல்லை. ஊர் முக்கியஸ்தர்கள் மத்தியில் சமாதானம் பேசப்பட்டு அதன்பிறகு வாதசாஆ 9 ஆவணத்தை எழுதிக்கொடுத்தார்கள். வாதசாஆ 8 சமாதான ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்ட தேதியில் இவ்வழக்கின் புரோநோட்டும் எழுதிக்கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம்.

( வேண்டுகோளின்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*